


# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்
"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"




Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 319 | 12.05.2026 | TUESDAY | CHITHIRAI: 29 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 319 | 12.05.2026 | செவ்வாய்கிழமை | சித்திரை : 29 | விலை : ரூ.5/-

# "பண்பட்ட அரசியல்... பார்போற்றும் தமிழகம்!"

## சபாநாயகர் தேர்தல்: தவெக சார்பில் ஜே.சி.டி.பிரபாகர் வேட்புமனு தாக்கல்

சென்னை: மே.12-

சபாநாயகர் தேர்தலில் போட்டியிடுதற்காக ஆளும் கட்சியான தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில், ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் ஜே.சி.டி.பிரபாகர் இன்று வேட்புமனுத் தாக்கல் செய்தார். சென்னைத் தலைமைச் செயலகத்தில் உள்ள சட்டமன்றச் செயலாளர் அலுவலகத்தில் அவர் தனது மனுவை சமர்ப்பித்தார்.

கடந்த ஜனவரி மாதம், விஜய் முன்னிலையில் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்த அவர், நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் ஆயிரம் விளக்கு தொகுதியில் திமுக வேட்பாளர் எழிலன் நாகநாதனை 15,141 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றார். கடந்த 2011ஆம் ஆண்டு சென்னை வில்லிவாக்கம் தொகுதியில் திமுக வேட்பாளரான அன்பழகனை வீழ்த்தி வெற்றிபெற்றார். சட்டமன்ற நடைமுறைகளில் அவருக்குள்ள அனுபவத்தை கருத்தில் கொண்டே, அவரை சபாநாயகர் வேட்பாளராக விஜய் தேர்வு செய்துள்ளதாகக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தமிழக முதல்வராக தவெக தலைவர் விஜய் பதவியேற்றுள்ள நிலையில், அக்கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் ஜே.சி.டி.பிரபாகர் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்படுவது கிட்டத்தட்ட உறுதியாகியுள்ளது. இருப்பினும், எதிர்க்கட்சிகள் சார்பில் யாராவது வேட்புமனுத் தாக்கல் செய்வார்களா என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. ஒருவேளை அவ்வாறு தாக்கல் செய்யும் பட்சத்தில் நாளை இதற்கான தேர்தல் குரல் வாக்கெடுப்பு மூலம் பேரவையில் நடைபெறும்.




## உலகிற்குப் பாடம் சொல்லும் தமிழக முதல்வர்களின் சந்திப்பு!

சென்னை, மே.12

"அரசியல் வேறு, பண்பாடு வேறு" என்பதை மீண்டும் ஒருமுறை உலகிற்கு உரக்கச் சொல்லியிருக்கிறது தமிழகம். அண்மையில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல் களத்தில் அனல் பறக்கும் விவாதங்களும், விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டாலும், அதிகார மாற்றத்தின் போது தமிழகத்தின் முன்னாள் மற்றும் இந்நாள் முதல்வர்கள் காட்டிய கண்ணியம் ஒட்டுமொத்த உலகையுமே வியந்து பார்க்க வைத்துள்ளது.



### இல்லம் தேடிச் சென்ற மரியாதை

தமிழகத்தின் புதிய முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள விஜய், முன்னாள் முதலமைச்சரும், திமுக தலைவருமான மு.க. ஸ்டாலின் அவர்களை அவரது இல்லத்திற்கே நேரில் சென்று சந்தித்தார். தனது இல்லத்திற்கு வந்த முதலமைச்சர் விஜய் அவர்களை, மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்முகத்தோடு, ஆரத் தழுவி வரவேற்றது அரசியல் கண்ணியத்தின் உச்சமாக பார்க்கப்படுகிறது. ஒரு மூத்த அரசியல் தலைவருக்கு வழங்க வேண்டிய மரியாதையைச் செவ்வனே செய்த இந்த நிகழ்வு, மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

தேர்தல் முடிவுகள் வந்தவுடன், மக்களின் தீர்ப்புக்குத் தலைவணங்கி, ஒரு ஆக்கபூர்வமான எதிர்க்கட்சியாகச் செயல்படுவோம் என்று மு.க. ஸ்டாலின் அறிவித்தது ஜனநாயகத்தின் மாண்பைக் காப்பதாக அமைந்தது.

### ஆக்கபூர்வமான அறிவுரைகள்:

வெறும் வாழ்த்துகளோடு நின்றுவிடாமல், "அரசாங்கத்திடம் நிதி இல்லை என்று காரணம் சொல்லாமல், மக்களுக்காகச் செலவிட வேண்டிய மன உறுதியை வளர்த்துக்கொள்ளுங்கள்" எனத் தனது அனுபவப் பாடத்தை ஒரு மூத்த தலைவராக ஏற்கனவே அறிவித்திருந்தார் மு.க.ஸ்டாலின் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆட்சி அதிகாரம் கைமாறினாலும், தமிழகத்தின் நலனுக்காக இருவரும் இணைந்து செயல்படும் இந்த அணுகுமுறை, "ஒற்றுமை அரசியலுக்கு" ஒரு புதிய இலக்கணத்தை வகுத்துள்ளது.

### மக்களின் எதிர்பார்ப்பு :

அரசியல் களத்தில் மோதல்கள் இருந்தாலும், நேரில் சந்திக்கும்போது தமிழர்களின் தனித்துவமான மரியாதையை வெளிப்படுத்துவதையே பண்பாடு மிக்கத் தமிழக மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

### ஒற்றுமை முழக்கம்:

தமிழகத் தலைவர்களின் இந்த முதிர்ச்சியான அணுகுமுறையை உலக நாடுகள் வியந்து பார்ப்பதோடு, தமிழக அரசியலின் 'ஒற்றுமை' மந்திரம் பேசுபொருளாகியுள்ளது.

### வரலாற்றுப் பதிவு:

தேர்தல் போர் முடிந்துவிட்ட நிலையில், மாநிலத்தின் வளர்ச்சிக்காக கைகோர்க்கும் இந்தப் பண்பாடு, தமிழர்களின் வீரத்திற்கும் ஈரத்திற்கும் மிகச்சிறந்த சான்று!

### சக்கர வியூகம் வாய்ஸ்:

அரசியல் பகைமையால் வன்முறைகளும், கசப்புணர்வுகளும் பெருகி வரும் இன்றைய உலகச் சூழலில், தமிழக முதல்வர்களின் இந்த நாகரிகமான சந்திப்பு உலக நாடுகளுக்கே ஒரு சிறந்த பாடமாகும். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற தமிழர்களின் பண்பாடு, இன்று அரசியல் களத்திலும் மிளிர்வது நமக்குப் பெருமை சேர்க்கிறது.

ஜனநாயக ரீதியான போட்டிகள் இருக்கலாம், ஆனால் அது தனிப்பட்ட பகைமையாக மாறக்கூடாது என்பதை இந்தச் சந்திப்பு உணர்த்தியுள்ளது. "அரசியல் வேறு, பண்பாடு வேறு" என்பதைத் தமிழர்கள் மீண்டும் ஒருமுறை உலகிற்கு நிரூபித்துள்ளனர்.

## "தங்கத்தில் கைவைக்கும் பிரதமர்! - தவிக்கும் தொழிலாளர்கள்" கார்ப்பரேட்களின் கடன் தள்ளுபடி! VS சாமானியனின் சேமிப்பு !

ஒரு நாட்டின் பிரதமர் என்பவர் நாட்டின் பொருளாதாரத்தை ஊக்குவிக்க வேண்டும், மக்களின் வாழ்வாதாரமான வியாபாரத்தைப் பெருக்க வேண்டும் என்பதுதான் பொதுவான எதிர்பார்ப்பு.

பொருளாதார ரீதியாக :

அரசாங்கத்தின் தரப்பில் இருந்து பார்த்தால், இந்தியா அதிகப்படியான தங்கத்தை இறக்குமதி செய்கிறது. இதற்காக நமது நாட்டின் அந்நியச் செலவாணி **(Foreign Exchange)** அதிகளவில் வெளியேறுகிறது. நாட்டின் பொருளாதாரப் பற்றாக்குறையைச் சமாளிக்கவே, "தங்கத்தில் முதலீடு செய்வதைக் குறைத்து, பணத்தைச் சுழற்சியில் விடுங்கள்" என்ற கோரிக்கையை அவர்கள் முன்வைக்கிறார்கள்.

"பொருட்களை வாங்குங்கள்" என்று சொல்வது உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கும். ஆனால் "தங்கம் வாங்காதீர்கள்" என்று சொல்வது ஒரு குறிப்பிட்டத் துறையை முடக்கும் செயலாகவே வியாபாரிகளால் பார்க்கப்படுகிறது. இது நாட்டின் ஒட்டுமொத்தப் பணப்புழக்கத்தைக் கட்டுப்படுத்துவதாக இருந்தாலும், அடிமட்டத் தொழிலாளர்களின் வயிற்றில் அடிக்கும் செயலாகவே மக்களால் பார்க்கப்படும்.


மக்கள் தங்கம் வாங்குவதைக் குறைத்திருப்பதற்குப் பின்னால் இருக்கும் "உண்மை நிலவரம்" இதோ:

1. விலை உயர்வு எட்டாக்கனியாகும் தங்கம்:

மக்கள் தங்கம் வாங்குவதை நிறுத்தியதற்கு முதல் மற்றும் மிக முக்கியமான காரணம் அதன் விர்ச்சுவல் விலை உயர்வு.

தங்கம் என்பது நடுத்தர மற்றும் ஏழை எளிய மக்களின் ஒரு "பாதுகாப்பு முதலீடு". ஆனால், தற்போது ஒரு சவரன் விலை கட்டுக்கடங்காமல் ஏறிக்கொண்டே போவதால், நினைத்த நேரத்தில் தங்கம் வாங்குவது என்பது சாமானிய மக்களுக்குச் சாத்தியமில்லாமல் போய்விட்டது.

"வாங்குவதை நிறுத்திவிட்டார்கள்" என்பதை விட, "வாங்க ஆசை இருந்தும் பணப்பை இடம் கொடுக்கவில்லை" என்பதே நிதர்சனம்.




2. பிரதமரின் வேண்டுகோள் யாருக்கு லாபம்?

பிரதமர் தங்கம் வாங்க வேண்டாம் என்று சொல்வதை மக்கள் இரண்டு விதமாகப் பார்க்கிறார்கள்:

பொருளாதார ரீதியாக: நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பை பாதுகாக்க அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கையாக இது இருந்தாலும், இது நேரடியாகத் தொழிலாளர்களைப் பாதிக்கிறது.

உளவியல் ரீதியாக: ஒரு நாட்டின் தலைவரே "தங்கம் வாங்காதீர்கள், கல்யாணச் செலவைக் குறையுங்கள்" என்று சொல்லும்போது, அது சந்தையில் ஒருவித அச்ச உணர்வை **(Panic)** உருவாக்குகிறது. இதனால் பணப்புழக்கம் குறைந்து, சிறு வியாபாரிகள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள்.

பொருளாதாரப் பாரபட்சம்: கார்ப்பரேட் நிறுவனங்களின் கடன்களைத் தள்ளுபடி செய்யும் அரசு, ஏழை மக்களின் சேமிப்பான தங்கம் மீது கை வைப்பது ஏன்?

வியாபாரிகளின் குரல்: ஆரணி பட்டு வியாபாரிகளோ அல்லது சிறு நகைக்கடை உரிமையாளர்களோ, இந்த "தங்கம் வேண்டாம்" என்ற பிரச்சாரத்தால் பணப்புழக்கம் குறைந்து, சிறு வியாபாரிகள் பெரும் பாதிப்புக்கு உள்ளாக நேரிடும் என்கிறார்கள்.

மாற்று முதலீடு: தங்கம் வாங்காதே என்று சொல்லும் அரசு, சாமானிய மக்களுக்குப் பாதுகாப்பான வேறு என்ன முதலீட்டுத் திட்டங்களை முன்னிறுத்துகிறது? அவை மக்களுக்குப் புரிகிறதா?

"தங்கம் வாங்காதீர்கள்" என்பது வெறும் நகைக்கடைகளை மட்டும் பாதிக்காது. இது தங்கம் மற்றும் பட்டு நெசவுத் தொழிலாளர்கள், கல்யாணச் சந்தை, மற்றும் பல தொழில்களையும் முடக்கும் செயல்.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

# ‘ஒரே வழக்கு ஒரே தரவு’, ‘சு சஹாய்’ சாட்பாட்: நீதித் துறையில் புதிய டிஜிட்டல் திட்டங்கள்

புதுடெல்லி:மே 12-

நீதித்துறையில் தரவு ஒருங்கிணைப்பை வலுப்படுத்தவும், நீதிமன்றச் சேவைகளை எளிமைப்படுத்தவும் இரண்டு முக்கிய டிஜிட்டல் திட்டங்களை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த் திங்கள்கிழமை தொடங்கி வைத்தார்.'ஒரே வழக்கு ஒரே தரவு' மற்றும் 'சு சஹாய்' என்ற செயற்கை நுண்ணறிவு சாட்போட் ஆகிய இந்த இரு திட்டங்களும் நீதித்துறையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.



ஒரே வழக்கு ஒரே தரவு இந்த திட்டத்தின் மூலம், நாடு முழுவதும் உள்ள உயர் நீதிமன்றங்கள், மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் தாலுகா நீதிமன்றங்களின் தகவல்கள் ஒரே ஒருங்கிணைந்த அமைப்பின் கீழ் கொண்டு வரப்படும். இதன் மூலம் ஒரு வழக்கின் விவரங்களை அனைத்து நிலைகளிலும் தடையின்றிப் பெற முடியும். இது நீதிமன்றங்களுக்கு இடையிலான தரவுப் பரிமாற்றத்தை எளிதாக்கி, காலதாமதத்தைக் குறைக்க உதவும்.சு சஹாய் சாட்பாட்பொதுமக்கள் மற்றும் வழக்கறிஞர்கள் உச்ச நீதிமன்ற சேவைகளை எளிதாக அணுக உதவும் வகையில் 'சு சஹாய்' என்ற ஏஜ சாட்போட் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தேசிய தகவலியல் மையம் மற்றும் உச்ச நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம் இணைந்து இதனை உருவாக்கியுள்ளன. இந்தச் செயலி மூலம் குடிமக்கள் தங்களுக்குத் தேவையான வழிகாட்டுதல்களை எளிய இடைமுகத்தின் மூலம் பெற முடியும்.இந்த டிஜிட்டல் முன்னெடுப்புகளைச் சிறப்பாகச் செயல்படுத்திய பதிவாளர் அலுவலக அதிகாரிகள் மற்றும் வழக்கறிஞர்களுக்குத் தலைமை நீதிபதி சூர்யகாந்த் தனது பாராட்டுகளைத் தெரிவித்தார். இந்தத் திட்டங்கள் நீதித்துறை சார்ந்த அனைத்துத் தரப்பினருக்கும் பெரும் பயனுள்ளதாக அமையும் என்று அவர் கூறினார்.

# காஷ்மீர் ‘புல்டோசர்’ நடவடிக்கை அமைச்சர் கடும் கண்டனம்

ஸ்ரீநகர்:மே 12-

ஜம்முகாஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் போதைப் பொருள் புழக்கத்தைக் கட்டுப்படுத்த போலீஸார் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக, போதைப்பொருள் கடத்தல் வழக்குகளில் தொடர்புடையவர்களின் சொத்துகளைக் கண்டறிந்து அவற்றை இடிக்கும் பணியில் பேோலீஸார் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த 10 நாட்களில் மட்டும் சுமார் 10க்கும் மேற்பட்ட குடியிருப்பு மற்றும் வணிக ரீதியான கட்டிடங்கள் இடித்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.இந்த அதிரடி நடவடிக்கை குறித்து காவல்துறை உயரதிகாரிகள் கூறுகையில், "போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களுக்குத் தெளிவான மற்றும் உறுதியான எச்சரிக்கையை விடுக்கும் வகையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடுபவர்கள் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்பதை இது உணர்த்தும்" என்று தெரிவித்தனர்.போலீஸாரின் இந்த ‘புல்டோசர்' நடவடிக்கைக்கு ஜம்மு காஷ்மீர் மாநில சுகாதார துறை அமைச்சர் சகினா இட்டு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் கூறுகையில், "போதைப்பொருள் கடத்தலைத் தடுப்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால், நீதிமன்ற விசாரணை இன்றி வீடுகளை இடிப்பது சட்டத்திற்குப் புறம்பானது. போதைப் பொருள் கடத்தல் காரர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமே தவிர, அவர்களது குடும்பத்தினர் வசிக்கும் வீடுகளை இடிப்பது முறையான செயல் அல்ல" என்றார்.



# இந்திய எண்ணெய் நிறுவனங்களுக்கு தினமும் ரூ.1,700 கோடி இழப்பு

புதுடெல்லி: மே 12-

கச்சா எண்ணெய் விலை உயர்வால் இந்திய எண்ணெய் நிறுவனங்களுக்கு தினமும் சுமார் ரூ.1,700 கோடி இழப்பு ஏற்பட்டு வருகிறது. இதை சமாளிக்க விலையை ஏற்ற வேண்டும் என்று மத்திய அரசுக்கு எண்ணெய் நிறுவனங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.



அமெரிக்கா, ஈரான் இடையிலான போர் காரணமாக, ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்டது. மேலும் இந்தப் பகுதியில் செல்லும் சரக்குக் கப்பல்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தும் அச்சமும் நிலவுகிறது. அத்துடன், ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் அமெரிக்க போர் கப்பல்களும் முற்றுகையிட்டுள்ளன. இதனால் கச்சா எண்ணெய் போக்குவரத்து எப்போது இயல்பு நிலைக்கு திரும்பும் என்று தெரியவில்லை.

இதனால் உலகளவில் பெட்ரோல், டீசல், காஸ் விலை 50 சதவீதம் வரை உயர்ந்துள்ளது. இதையடுத்து, இந்தியாவின் அண்டை நாடுகள் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலைகள் உயர்த்தப்பட்டன. ஆனால், இந்தியாவில் அவற்றின் விலை உயர்த்தப்படவில்லை. அதேநேரம் வர்த்தக சிலிண்டர் விலை மட்டும் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், எண்ணெய் நிறுவனங்களுக்கு ஏற்படும் நஷ்டத்தை ஈடுகட்ட மத்திய அரசு நிதி ஒதுக்கியது. இதன் மூலம் இந்தியாவில் பெட்ரோல், டீசல் விலை உயராமல் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனினும், எரிபொருள் விலையை உயர்த்தாததால், இந்தியன் ஆயில் (ஐஓசி), பாரத் பெட்ரோலியம் (பிபிசிஎல்) மற்றும் ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் (ஹெச்பிசிஎல்) ஆகிய நிறுவனங்களுக்குத் தினமும் ரூ.1,600 கோடி முதல் ரூ.1,700 கோடி வரை நஷ்டம் ஏற்படுகிறது. இதனால் கடந்த 10 வாரங்களில் சுமார் ரூ.1 லட்சம் கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது. நுகர்வோருக்குப் பாதிப்பு ஏற்படாமல் இருக்க இந்த நிறுவனங்கள் நஷ்டத்தைத் தாங்கிக் கொண்டாலும், நிதி ரீதியாக இது எவ்வளவு காலம் சாத்தியம் என்ற கேள்வி எழுந்துள்ளது.

# மாணவர் தற்கொலை அதிகரிப்பு: 2024ல் 14,488 பேர் உயிரிழப்பு

புதுடெல்லி::மே 12-

இந்தியாவில் மாணவர்களின் தற்கொலை எண்ணிக்கை முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிகரித்து வருகிறது. கடந்த 2024ம் ஆண்டில் மட்டும் 14,488பேர் உயிரிழந்துள்ளனர். இது முந்தைய ஆண்டை விட 4.3 சதவீதம் அதிகம் என்று தேசிய குற்ற ஆவணக் காப்பகம் (NCRB) வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.நாட்டின் ஒட்டுமொத்த தற்கொலைகளின் எண்ணிக்கை சற்றே குறைந்திருந்தாலும், மாணவர்கள் உயிரிழப்பது அதிகரித்திருப்பது பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.இதுகுறித்து புள்ளிவிவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: 2023ல் 1,71,418ஆக இருந்த நாட்டின் மொத்த தற்கொலைகளின் எண்ணிக்கை, 2024ல் 1,70,746ஆக (0.4%) குறைந்துள்ளது. ஆனால், 2023ல் 13,892 ஆக இருந்த மாணவர் தற்கொலை 2024ல் 14,488ஆக அதிகரித்துள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் (20152024) மாணவர் தற்கொலை விகிதம் 62.2 சதவீதம் அதிகரித்துள்ளது. 2015ல் 8,934ஆக இருந்த இந்த எண்ணிக்கை தற்போது 14,488ஐ எட்டியுள்ளது. மாணவர்கள் தற்கொலையில் மகாராஷ்டிரம் (13.2%) முதலிடத்தில் உள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தரப் பிரதேசம் (10.9%), மத்தியப் பிரதேசம் (10%) மற்றும் தமிழ்நாடு (8.9%) ஆகிய மாநிலங்கள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.கல்வித் தகுதியின் அடிப்படையில் பார்த்தால், 10ம் வகுப்பு வரை படித்த மாணவர்களே அதிகளவில் (25.6%) தற்கொலை செய்துள்ளனர். இதற்கு அடுத்தபடியாக 12ம் வகுப்பு (18.3%) மற்றும் 8ம் வகுப்பு (17.7%) பயின்ற மாணவர்கள் உள்ளனர். இவ்வாறு புள்ளி விவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வானிலை முன்னறிவிப்பு: தமிழகத்தில் 6 நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்பு

சென்னை:மே 12-

மன்னார் வளைகுடா பகுதியில் நிலவும் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாக தமிழகத்தில் ஒருசில இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்: “மன்னார் வளைகுடா பகுதியில் நிலவிய வளிமண்டல மேலடுக்கு சுழற்சியால், குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளது. இது ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.



இதன் காரணமாக இன்று (மே.11) முதல் மே.16ம் தேதி வரை 6 நாட்களுக்கு தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.குறிப்பாக (மே.11) இன்று ராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும். மே.12ம் தேதி (நாளை) தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை மாவட்டங்களில் பலத்த காற்றுடன் கன மழை பெய்யக்கூடும்.மே.13ம் தேதி முதல் 16ம் தேதி வரை நீலகிரி, கோவை, ஈரோடு, திருப்பூர், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல் மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையை பொருத்தவரை இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமானது வரை மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னையில் அதிகபட்சமாக 34 டிகிரி செல்சியஸ் முதல் 27 டிகிரி செல்சியஸ் பதிவாக வாய்ப்புள்ளது.மீனவர்கள் எச்சரிக்கை: தென்மேற்கு வங்கக்கடலின் சில பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய தென் கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக் காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். அதனால் இன்று முதல் 14ம் தேதி வரை குறிப்பிட்ட நாட்களில் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று வானிலை ஆய்வு மையம் அறிவுறுத்தியுள்ளது.

# “எனக்கு பிடிக்கவில்லை” ஈரானின் பதிலை நிராகரித்த ட்ரம்ப்

வாஷிங்டன்:மே 12-

மத்திய கிழக்கில் நிலவும் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக அமெரிக்கா முன்வைத்த அமைதித் திட்டத்துக்கு ஈரான் அளித்த பதிலை அதிபர் டொனால்டு ட்ரம்ப் திட்டவட்டமாக நிராகரித்துள்ளார். தனது ட்ரூத் சோஷியல் தளத்தில் இது குறித்துப் பதிவிட்டுள்ள ட்ரம்ப், "ஈரானின் பிரதிநிதிகள் அனுப்பிய பதிலை இப்போதுதான் வாசித்தேன். இது எனக்குப் பிடிக்கவில்லை; இது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது” என்று பதிவிட்டுள்ளார். எனினும் நிராகரிப்புக்கான காரணம் குறித்து அவர் தெளிவாக எதையும் விளக்கவில்லை. முன்னதாக அவர் வெளியிட்ட மற்றொரு பதிவில், கடந்த 47 ஆண்டுகளாக ஈரான் காலதாமதம் செய்யும் தந்திரத்தைக் கையாண்டு அமெரிக்காவைப் பார்த்துச் சிரித்து வருவதாகவும், இனி அவர்கள் அப்படிச் சிரிக்க முடியாது என்றும் அவர் எச்சரித்துள்ளார்.முன்னாள் அதிபர் ஒபாமா ஈரானுக்குப் புதிய வாழ்வாதாரத்தை வழங்கியதாகக் குறிப்பிட்ட ட்ரம்ப், தற்போது நிலைமை மாறிவிட்டதாகத் தெரிவித்தார்.பாகிஸ்தான் நாட்டின் மத்தியஸ்தம் மூலம் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்ட ஈரானின் பதிலில் சில முக்கிய நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



லெபனான் உட்பட அனைத்து முனைகளிலும் போரை உடனடியாக நிறுத்த வேண்டும். ஈரான் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளை நீக்க வேண்டும். அடுத்த 30 நாட்களுக்கு ஈரான் எண்ணெய் விற்பனை மீதான தடைகளை நீக்கி, கடற்படை முற்றுகையைத் தளர்த்த வேண்டும் ஆகிய நிபந்தனைகள் அதில் இடம்பெற்றதாக கூறப்படுகிறது.ஈரானின் இந்த ஒட்டுமொத்த பதில் திருப்திகரமாக இல்லை எனக் கருதும் ட்ரம்ப், தனது 'வால் ஆஃப் ஸ்டீல்' என அழைக்கப்படும் கடற்படை முற்றுகை மற்றும் பொருளாதார அழுத்தத்தைத் தொடரப்போவதாக தெரிகிறது.



# நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் உடன் முதல்வர் ஜோசப் விஜய் சந்திப்பு

சென்னை: மே 12-

தமிழக முதல்வராக பொறுப்பேற்றுள்ள ஜோசப் விஜய் இன்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானை அவரது இல்லத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றார். நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்த தவெகவின் தலைவர் ஜோசப் விஜய், தமிழக முதல்வராக நேற்று பொறுப்பேற்றார். இந்தச் சூழலில், அவர் இன்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானை அவரது இல்லத்தில் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானை சந்திக்க சென்னை நீலாங்கரையில் உள்ள அவரின் இல்லத்துக்கு வந்த ஜோசப் விஜய்யை, சீமான் வாசலுக்கே வந்து ஆரத் தழுவி வரவேற்றார். சீமானுக்கு ஜோசப் விஜய் பூங்கொத்து கொடுத்து வாழ்த்து பெற்றார். இதனையடுத்து சீமானும் முதல்வர் ஜோசப் விஜய்க்கு புத்தகம் கொடுத்து மரியாதை செய்தார்.சீமானுடன் சிறிது நேரம் உரையாடிய பின்னர் அங்கிருந்து முதல்வர் ஜோசப் விஜய் புறப்பட்டார். முதல்வர் ஜோசப் விஜய்யை வாசல் வரை வந்து சீமான் வழியனுப்பி வைத்தார்முன்னதாக, இன்று முதல்வர் ஜோசப் விஜய் தமிழக முன்னாள் முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலினை அவரின் இல்லத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றார். அதன்பின்னர் மதிமுக பொதுச் செயலாளர் வைகோவையும், பாமக தலைவர் அன்புமணியையும் அவர்களின் இல்லத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றது குறிப்பிடத்தக்கது

# பிரதமர் மோடி தலைமையில் சோம்நாத் கோயிலுக்கு கும்பாபிஷேகம்

கிர் சோம்நாத்::மே 12-

குஜராத்தின் கிர் சோம்நாத் மாவட்டத்தில் உள்ள சோம்நாத் கோயிலுக்கு பிரதமர் மோடி தலைமையில் முதல் முறையாக இன்று கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

குஜராத்தின் கிர் சோம்நாத் மாவட்டத்தில் உள்ள சோம்நாத் கோயில், முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத்தால் புதுப்பிக்கப்பட்டு 1951ம் ஆண்டு திறக்கப்பட்டது. இதன் 75வது ஆண்டு நிறைவை முன்னிட்டு, இக்கோயிலுக்கு பிரதமர் மோடி தலைமையில் இன்று கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.



குஜராத்தில் கோயில்களுக்கு கும்பாபிஷேகம் செய்யும் வழக்கம் இல்லை. ஆனால் தென்னிந்திய கோயில்கள் புதுப்பிக்கப்பட்டு 10 முதல் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை கும்பாபிஷேகம் நடத்தப்படுவது வழக்கம். இதே முறையை பின்பற்றி சோம்நாத் கோயிலுக்கும் முதல் முறையாக கும்பாபிஷேகம் செய்ய முடிவு செய்யப்பட்டது. இதற்கு பிரதமர் மோடி தலைமை தாங்குகிறார். இது மிகுந்த உற்சாகத்தை அளிப்பதாக தீர்த் புரோகித் சோம்புரா பிராமின் சமாஜ் தலைவர் ஸ்ரீ ஹெமால்பாய் பாட் தெரிவித்துள்ளார். சோம்நாத் மகாதேவ்க்கு பிரதமர் இன்று நடத்தும் மகா பூஜையைத் தொடர்ந்து இந்த கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. இதற்காக நாட்டின் 11 முக்கிய புனித தலங்களில் இருந்து புனித நீர் கொண்டு வரப்பட்டுள்ளது. இது சோம்நாத் கோயிலின் கோபுர கலசத்தில் வேத மந்திரங்கள் முழங்க ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

# உபி அமைச்சரவை விரிவாக்கம் 6 புதிய அமைச்சர்கள் பதவியேற்பு

லக்னோ:மே 12-

முதல்வர் யோகி ஆதித்யநாத் தலைமையிலான உபி அமைச்சரவை நேற்று விரிவாக்கம் செய்யப்பட்டது. இதில் புதிதாக 6 அமைச்சர்கள் பதவியேற்றனர். ஆளுநர் மாளிகையில் நடந்த விழாவில் புதிய அமைச்சர்களுக்கு ஆளுநர் ஆனந்திபென் படேல் பதவி பிரமாணம் செய்து வைத்தார். விழாவில் கேபினட் அமைச்சர்களாக பூபேந்திர சவுத்ரி, மனோஜ் பாண்டே பதவியேற்றனர். மாநில அமைச்சர்களாக கிருஷ்ணா பஸ்வான்,சுரேந்திர திலேர்,ஹன்ஸ்ராஜ் விஷ்வகர்மா,கைலாஷ் ராஜ்புத் ஆகியோர் பதவியேற்றனர்.உபியில் அடுத்தாண்டு சட்ட பேரவை தேர்தல் நடக்க உள்ளது. தேர்தலை முன்னிட்டு மாநிலத்தின் பல்வேறு சமூக பிரிவினரை திருப்திபடுத்தும் வகையில் அமைச்சரவை விரிவாக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. உபி அமைச்சரவையின் அதிகபட்ச எண்ணிக்கை 60 ஆகும். விரிவாக்கத்திற்கு முன்னர் 54 பேர் அமைச்சரவையில் இருந்தனர். ஆறு இடங்கள் காலியாக இருந்தன

# எரிபொருள் பயன்பாட்டை குறைக்க ஒன்றிணைவோம்: மக்களுக்கு மத்திய அரசு அழைப்பு

புதுடெல்லி::மே 12-

நாட்டின் மீது அதிகரித்து வரும் பொருளாதாரச் சுமையைக் குறைக்கும் நோக்கில் எரிசக்தியைச் சேமிக்கத் தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம் என்று பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் இணைச் செயலாளர் சுஜாதா சர்மா கேட்டுக்கொண்டுள்ளார்.

டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய சுஜாதா சர்மா, “மேற்கு ஆசிய நெருக்கடி காரணமாக எரிசக்தி விநியோகத்தில் சர்வதேச அளவில் தடைகள் ஏற்பட்டுள்ளன என்பது அனைவரும் அறிந்ததுதான். இதனால், சர்வதேச சந்தையில் விலைகளின் ஏற்ற இறக்கம் அதிகரித்து காணப்படுகிறது. எனினும், இந்திய அரசு பல்வேறு நடவடிக்கைகள் மூலம், எரிபொருள் விநியோகம் சாமானிய நுகர்வோருக்கு குறைந்தபட்ச சிரமத்துடன் சென்றடைவதை உறுதி செய்ய முயன்றுள்ளது.



நமது கச்சா எண்ணெய் இருப்பு சிறப்பாக பராமரிக்கப்பட்டு வருகிறது. நமது சுத்திகரிப்பு நிலையங்கள் முழு திறனுடன் இயங்கி வருகின்றன. எந்தவொரு சில்லறை விற்பனை நிலையத்திலும் எரிபொருள் தீர்ந்துபோனதாக தகவல் இல்லை. பெட்ரோல், டீசல் ஆகியவை போதுமான அளவு கையிருப்பில் உள்ளது. வீட்டு உபயோகத்துக்கான எல்பிஜி விநியோகமும் தடையின்றி நடைபெற்று வருகிறது.கடந்த மூன்று நாட்களில் ஒரு கோடியே 26 லட்சம் எல்பிஜி முன்பதிவுகளுக்கு 1.14 கோடி எல்பிஜி சிலிண்டர்கள் வீடுகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. இதேபோல், வணிக ரீதியிலான எல்பிஜி விற்பனை கடந்த மூன்று நாட்களில் 17,000 டன்களைத் தாண்டியுள்ளது. வாகனங்களுக்கான எல்பிஜி (Auto LPG) விற்பனையும் 762 டன்களைக் கடந்துள்ளது. நாட்டின் அனைத்து குடிமக்களும் பெட்ரோல், டீசல் பயன்பாட்டைக் குறைத்துக்கொள்ளுமாறு பிரதமர் வலியுறுத்தியுள்ளார். சாத்தியமான இடங்களில் எல்லாம் மெட்ரோ ரயில் மற்றும் பொதுப் போக்குவரத்து வசதிகளைப் பயன்படுத்துங்கள். ஒரே வாகனத்தில் பலரும் பயணிக்கும் முறையைத் தேர்ந்தெடுங்கள். சரக்கு போக்குவரத்துக்கு ரயில்வையை முதன்மை போக்குவரத்து முறையமாகக் கருதுங்கள். சாத்தியமான இடங்களில் எல்லாம் மின்சார வாகனங்களின் பயன்பாட்டை அதிகரியுங்கள். நாட்டின் மீது அதிகரித்து வரும் பொருளாதாரச் சுமையைக் குறைக்கும் நோக்கில் எரிசக்தியைச் சேமிக்கத் தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம்” என்று தெரிவித்துள்ளார்.




## விஜய் முதலமைச்சராக பதவி ஏற்பு! அலங்காநல்லூர் நிர்வாகிகள் பட்டாசு வெடித்து கொண்டாட்டம்

அலங்காநல்லூர்.மே.12-
தமிழக முதல்வராக தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் ஜோசப்விஜய், பொறுப்பேற்றுக் கொண்டதை முன்னிட்டு மதுரை மாநகர் வடக்கு மாவட்ட செயலாளர் விஜய் அன்பன் கல்லானை,மற்றும் புறநகர் மாவட்ட செயலாளர் விஷால் கிருஷ்ணா, உத்தரவின் பேரிலும் ஒன்றிய செயலாளர் விஜய்ஹரிஷ், நகரச் செயலாளர் தளபதிரஞ்சித், ஆலோசனையின் பேரிலும் அலங்காநல்லூர் ஸ்ரீ முனியாண்டி கோவில் சிறப்பு பிரார்த்தனை வடக்கு ஒன்றிய நிர்வாகி தனசேகரன் தலைமையில் ராஜ்குமார் முன்னிலையில் நடைபெற்றது. பின்னர் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

கேட்டுகடை பகுதியில் மேளதாளங்கள் முழங்க பட்டாசு வெடித்து பொதுமக்கள் மற்றும் வணிகர்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது. அப்போது நிர்வாகிகள் தமிழக முதல்வர் விஜய் வாழ்க வாழ்க என்று கோசம் எழுப்பினர்.

## தவெக அரசு செய்வது கருத்து சுதந்திரம் மீதான தாக்குதல்: தமிழக பாஜக சாடல்



சென்னை: மே.12-
'தமிழகத்தில் புதிய அரசு பொறுப்பேற்ற முதல் நாளிலேயே, சமூக வலைதளங்களில் விமர்சனம் செய்பவர்களின் கணக்குகளை முடக்க கோருவது பேச்சு சுதந்திரத்தின் மீதான வெளிப்படையான தாக்குதல்' என பாஜக மாநிலத் தலைமைச் செய்தி தொடர்பாளர் நாராயணன் திருப்பதி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "தமிழ்நாடு இணைய குற்றப்பிரிவு எக்ஸ் தளத்துக்கு அனுப்பியுள்ள ஓர் அறிவிக்கையில் @MaridhasAnswers உட்பட 18 கணக்குகளின் விமர்சனப் பதிவுகளை நீக்கவும், முடக்கவும் கோரியுள்ளது, பேச்சு சுதந்திரத்தின் மீதும் அரசியல் எதிர்ப்பின் மீதும் நடத்தப்பட்ட வெளிப்படையான தாக்குதல் ஆகும்.ஓர் அரசியல் கட்சியையோ அல்லது அதன் தலைவரையோ கடுமையாக விமர்சித்தால் "பொது அமைதியை தூண்டுதல்" என்று சொல்லி போலீஸ் தலையீடும், எச்சரிக்கையும் தேவையற்ற நடவடிக்கையே.நிர்வாகம், நிதி, கொள்கைகள் குறித்த நியாயமான கேள்விகளை "பொது அமைதிக்கு அச்சுறுத்தல்" என்று முத்திரை குத்துவது ஆபத்தான முன்னுதாரணத்தை ஏற்படுத்தி, ஜனநாயகத்தை நெறித்துவிடும்.எதிர்ப்பு என்பது ஜனநாயகத்தின் உயிர் நாடி. தவெக அல்லது எந்தவொரு ஆளும் கட்சியின் விமர்சகர்களை அடக்கவும் சைபர் சட்டங்களைப் பயன்படுத்துவது அரசியலமைப்பையே பலவீனப்படுத்தும் செயலாகும். இது சட்ட அமலாக்கம் அல்ல, மாறாக இது அதிகார துஷ்பிரயோகமாகும். இந்த அதிகார துஷ்பிரயோகத்தை பாஜக வன்மையாகக் கண்டிக்கிறது.பேச்சு சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும், ஆளும் தரப்பின் விருப்பத்திற்கேற்ப ஏற்ப காவல் துறை செயல்படக் கூடாது.தவெக ஆட்சிப் பொறுப்பேற்ற முதல் நாளிலேயே சாமானிய மக்கள் மீது இந்த வருந்தத்தக்க துன்புறுத்தல் தொடங்கியுள்ளது அதிர்ச்சியளிக்கிறது. முதல்வரான பின்னர் தன் முதல் உரையில், அரசியல் பயணத்தில் பல தடைகளை எதிர்கொண்டதாக பேசிய முதல்வர் ஜோசப் விஜய், இந்த அதிகார துஷ்பிரயோகத்தை, அத்துமீறலை புரிந்துகொண்டு, உடனடியாக சைபர் குற்றப் பிரிவின் மேற்படி நடவடிக்கையை திரும்பப் பெற உத்தரவிடுவார் என்று நம்புகிறேன்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக நடைபெற்ற திராவிட மாடல் அராஜகங்களை தொடர வேண்டாம். அதே நேரம், முதலமைச்சரை தரக்குறைவாகவோ, அநாகரிகமாகவோ யார் விமர்சித்திருந்தாலும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதில் நமக்கு மாற்றுக் கருத்தில்லை. ஆனால், கொள்கை ரீதியான விமர்சனமும், அரசியல் எதிர்ப்பும் குற்றங்கள் அல்ல என்பதை முதல்வர் உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

## வடகொரியாவின் 'டெட் ஹேண்ட்'

## அதிபர் கிம்முக்கு ஏதாவது நேர்ந்தால் தானாகவே அணு ஆயுத தாக்குதல்



பியாங்யாங்::மே 12-
வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன்னுக்கு ஏதாவது நேர்ந்தால், எதிரி நாடுகள் மீது தானாகவே அணு ஆயுத தாக்குதல் நடத்தப்படும் என்று அந்த நாடு எச்சரிக்கை விடுத்துள்ளது. இது வடகொரியாவின் 'டெட் ஹேண்ட்' என்றழைக்கப்படுகிறது.

கடந்த 1980களில் சோவியத் யூனியன் (ரஷ்யா) 'டெட் ஹேண்ட்' என்ற அணு ஆயுத கட்டளை அமைப்பை உருவாக்கியது. எதிரி நாடுகளின் அணு ஆயுத தாக்குதலால் ரஷ்யா அழிந்து, அதன் தலைவர்கள் உயிரிழந்தால் 'டெட் ஹேண்ட்' தானாக செயல்பட்டு எதிரி நாடுகள் மீது அணு ஆயுத தாக்குதல்களை நடத்தும். இந்த 'டெட் ஹேண்ட்' அணு ஆயுத கட்டளை அமைப்பை தற்போதைய ரஷ்ய அரசு நவீன தொழில்நுட்பத்துடன் புதுப்பித்து வைத்திருக்கிறது. இதே பாணியில் வடகொரியாவும் 'டெட் ஹேண்ட்' அமைப்பை உருவாக்கி உள்ளது. இதுகுறித்து சர்வதேச பாதுகாப்பு நிபுணர்கள் கூறியதாவது:

வடகொரியாவின் அரசமைப்புச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டு உள்ளன. இதன்படி பாதுகாப்பு சார்ந்த சட்டங்களிலும் பல்வேறு திருத்தங்கள் செய்யப்பட்டு உள்ளன. குறிப்பாக ரஷ்யாவை பின்பற்றி வடகொரியாவிலும் 'டெட் ஹேண்ட்' அணு ஆயுத கட்டளை அமைப்பு உருவாக்கப்பட்டு உள்ளது. எதிரி நாடுகளின் தாக்குதலில் வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன்னுக்கு ஏதாவது நேர்ந்தால் 'டெட் ஹேண்ட்' அமைப்பு தானாக செயல்பட்டு, எதிரி நாடுகளின் மீது அணு ஆயுத தாக்குதல்கள் நடத்தப்படும். அமெரிக்கா, ஈரான் போர், வெனிசூலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ சிறைபிடிக்கப்பட்டது ஆகியவற்றை கருத்தில் கொண்டு 'டெட் ஹேண்ட்' அமைப்பு உருவாக்கப்பட்டிருப்பதாக வடகொரியா விளக்கம் அளித்திருக்கிறது. இது மிகவும் ஆபத்தானது.

ஒருவேளை அதிபர் கிம் ஜாங் உன்னின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் 'டெட் ஹேண்ட்' அமைப்பால் தென்கொரியாவுக்கு மிகப்பெரிய அளவில் பாதிப்பு ஏற்படும். வடகொரியாவின் அணு ஆயுதங்களை சுமந்து செல்லும் ஹ்வாசாங் ரக ஏவுகணைகள் சுமார் 15,000 கிமீ. தொலைவு சீறிப் பாயக்கூடியவை என்று கூறப்படுகிறது. இதனால் வெகுதொலைவில் உள்ள அமெரிக்காவின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்படும். இவ்வாறு சர்வதேச பாதுகாப்பு நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

## 125 நாட்கள் வேலை வழங்கும் 'விபி ஜி ராம் ஜி' திட்டம் ஜூலை 1 முதல் அமல்



புது டெல்லி:மே 12-
மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாத திட்டத்துக்கு மாற்றாக கொண்டு வரப்பட்ட விபி ஜி ராம் ஜி திட்டம் ஜூலை 1ஆம் தேதி முதல் அமலுக்கு வரும் என மத்திய அரசு அறிவித்துள்ளது.புதிய விபி ஜிராம் ஜி திட்டம் ஜூலை 1ஆம் தேதி முதல் இந்தியா முழுவதும் அமலுக்கு வரும் என்றும், இது தற்போதுள்ள மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தின் (MGNREGA) விதிமுறைகளை படிப்படியாக மாற்றியமைக்கும் என்றும் மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகம் தெரிவித்துள்ளது. வாழ்வாதாரத்துக்கான வாய்ப்புகளை விரிவுபடுத்துவதன் மூலமும், கிராமப்புற உள்கட்டமைப்பை வலுப்படுத்துவதன் மூலமும், கிராமப்புறத் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் கிராமங்களுக்கு இந்த திட்டம் ஒரு புதிய விடியலை கொண்டுவரும் என்று மத்திய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் தெரிவித்தார்.

போபாலில் செய்தியாளர்களைச் சந்தித்த சவுகான், "இந்த புதிய திட்டமானது கிராமப்புறக் குடும்பங்களுக்கு ஆண்டுக்கு 125 நாட்கள் வேலை வாய்ப்புக்கான உத்தரவாதம் அளிக்கும். இச்சட்டம் முழுமையாக அமலாகும் வரை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி சட்டத்தின் அனைத்து தற்போதைய விதிகளும் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும். புதிய சட்டம் அமலாகும் வரையிலான காலத்தில் அனைவருக்கும் வேலை வாய்ப்பு கிடைப்பதை உறுதி செய்வதே அரசாங்கத்தின் முன்னுரிமையாகும்.

இச்சட்டத்தை அமல்படுத்துவதற்கான விதிகள் மாநிலங்களுடன் கலந்தாலோசித்த பிறகு இறுதி செய்யப்பட்டு வருகிறது. புதிய சட்டத்தின் கீழ் செயல்பாட்டுத் தயார் நிலையை நிறைவு செய்ய மாநிலங்களுக்கு ஆறு மாதங்கள் வரை அவகாசம் வழங்கப்படும். சில மாநிலங்கள் தங்கள் ஏற்பாடுகளை இன்னும் நிறைவு செய்யாதிருந்தாலும் கூட, ஜூலை 1 முதல் கிராமப்புற வேலைவாய்ப்புப் பணிகளுக்கான நிதி விபி ஜி ராம் ஜி சட்டத்தின் மூலமாகவே வழங்கப்படும். மத்திய பட்ஜெட்டில் இத்திட்டதுக்காக மத்திய அரசு ரூ.95,000 கோடிக்கும் அதிகமாக நிதி ஒதுக்கியுள்ளது. அதேவேளையில் மாநிலங்களும் தனித்தனியாக பட்ஜெட் ஒதுக்கீடுகளைச் செய்துள்ளன. இத்திட்டத்தின் கீழ் ஏற்படும் மொத்த ஆண்டுச் செலவு ரூ.1.51 லட்சம் கோடிகளை தாண்டும்" என்று அவர் தெரிவித்தார்.



## மதிமுக பொதுச் செயலர் வைகோவை: சந்தித்து வாழ்த்து பெற்றார் முதல்வர் ஜோசப் விஜய்

சென்னை:மே 12-
தமிழக முதல்வராக பொறுப்பேற்றுள்ள ஜோசப் விஜய் இன்று மதிமுக பொதுச் செயலாளர் வைகோவை அவரது இல்லத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்த தவெகவின் தலைவர் ஜோசப் விஜய், தமிழக முதல்வராக நேற்று பொறுப்பேற்றார். இந்தச் சூழலில், அவர் இன்று மதிமுக பொதுச் செயலாளர் வைகோவை அவரது இல்லத்தில் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.மதிமுக பொதுச் செயலாளர் வைகோவை சந்திக்க சென்னை அண்ணா நகரில் உள்ள அவரின் இல்லத்துக்கு வந்த விஜய்யை, மதிமுக முதன்மை செயலாளர் துரை வைகோ ஆரத் தழுவி வரவேற்றார். வைகோவுக்கு ஜோசப் விஜய் பொன்னாடை போர்த்தி வாழ்த்து பெற்ற நிலையில், பதிலுக்கு வைகோவும் ஜோசப் விஜய்க்கு பொன்னாடை போர்த்தினார்.இதனையடுத்து முதல்வர் ஜோசப் விஜய், வைகோவுடன் சிறிது நேரம் உரையாடினார். இதன் பின்னர் வைகோவும், விஜய்யும் கைகோத்தபடி வெளியே வந்தனர். அப்போது இருவரும் இல்லத்துக்கு வெளியே கூடியிருந்தவர்களைப் பார்த்து கையசைத்தபடி மகிழ்ச்சியோடு வந்தனர். அதன்பின்னர் ஜோசப் விஜய்யை வைகோ காரில் வழியனுப்பி வைத்தார். முன்னதாக, இன்று முதல்வர் ஜோசப் விஜய் தமிழக முன்னாள் முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலினை அவரின் இல்லத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

## கவனம் ஈர்த்த கீர்த்தனா

## தவெகவில் இணைந்ததும் வேட்பாளர், சிவகாசியின் முதல் பெண் எம்எல்ஏ, அமைச்சர் பதவி



சிவகாசி:மே 12-
விருதுநகர் தொகுதியின் வேட்பாளர் என தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு வந்த கீர்த்தனா, சிவகாசியின் தவெக வேட்பாளராக களமிறங்கி, அந்தத் தொகுதியின் முதல் பெண் எம்.எல்.ஏ.வாக தேர்வானதுடன் அமைச்சராகவும் பொறுப்பேற்றுள்ளார்.

விருதுநகர் தொகுதியில் 'விருதை மகள்' கீர்த்தனா என்ற அடைமொழி உடன் 2026 ஜனவரி 1 முதல் பிரச்சாரத்தைத் தொடங்கினார். பிரதானக் கட்சிகளை எதிர்த்து விருதுநகர் தொகுதியில் கிராமம் கிராமமாகச் சென்று பிரச்சாரம் செய்தார். அடிப்படை பிரச்சினைகள், நிறைவேற்றப்படாத அறிவிப்புகள் குறித்து சமூக வலைதளத்தில் கேள்வி எழுப்பி மக்களின் அறிமுகத்தைப் பெற்றார். விருதுநகர் தொகுதியில் சுயேச்சை வேட்பாளராக களமிறங்கப் போவதாகக் கூறி வந்த கீர்த்தனா, திடீரென தவெகவில் இணைந்தார். மறுநாளே கீர்த்தனா சிவகாசி தொகுதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டார். தேர்தல் வியூகம் வகுக்கும் நிறுவனத்தில் 8 ஆண்டுகள் பணியாற்றிய அனுபவம் கொண்ட கீர்த்தனா சமூக வலைதளங்கள் மூலமாக தீவிரப் பிரச்சாரம் மேற்கொண்டார். வெளியூர் வேட்பாளர் என்ற விமர்சனத்தை பின்னுக்குத் தள்ளி சிவகாசி தொகுதியில் வெற்றி பெற்றார்.

1957ல் உருவாக்கப்பட்ட சிவகாசி சட்டப்பேரவைத் தொகுதியில் அதிமுக 5 முறை, காங்கிரஸ் 3 முறை, தமாகா 2 முறை, திமுக 2 முறை, மதிமுக, சுதந்திரா கட்சி, ஜனதா கட்சி ஆகியவை தலா ஒரு முறை வெற்றி பெற்றுள்ளன.

இதுவரை சிவகாசி தொகுதியில் ஒருமுறைகூட பெண் வெற்றி பெற்று எம்எல்ஏ ஆனதில்லை. தற்போது சிவகாசி தொகுதியில் வெற்றி பெற்று, அந்தத் தொகுதியின் முதல் பெண் எம்எல்ஏவாக தேர்வாகி ஆச்சரியப்படுத்தியுடன், தவெக அரசில் அமைச்சராகவும் பொறுப்பேற்றுள்ளார்.

சட்டப்பேரவை உறுப்பினராக பதவியேற்ற கீர்த்தனா, "நன்றி சிவகாசி மக்களே! என் மீது நீங்கள் வைத்துள்ள நம்பிக்கையை, சிறந்த பணிகளின் மூலம் நிச்சயமாக நிறைவேற்றுவேன். முதல்வர் விஜய் கூறியது போல, "வளர்ச்சிக்கான காலம் இப்போது தொடங்கியுள்ளது!" என்று தனது சமூக வலைதளப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## "கஜானா காலி எனப் பேசுவது ஆரோக்கியமற்றது" முதல்வர் விஜய்க்கு காதர் மொகிதீன் அறிவுரை!




சென்னை::மே 12-
தமிழக முதல்வராக பொறுப்பேற்றுள்ள விஜய், தனது முதல் உரையிலேயே தமிழக அரசின் கஜானா முழுவதும் துடைக்கப்பட்டு இருப்பதாக குறைக்கூற தொடங்கியிருப்பது ஆரோக்கியமற்றது என இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் காதர் மொகிதீன் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது : 'சிறந்த முறையில் மக்களுக்கான நலத்திட்டங்களையும், கல்வி, தொழில், பொருளாதாரம், விவசாயம் என பல்வேறு துறைகளில் தமிழ்நாடு செழிப்புற ஆட்சி செய்த திமுக அரசு தொடர வேண்டும்' என மக்களிடம் வாக்குகள் கேட்டு எங்கள் கட்சியின் சார்பில் இரண்டு உறுப்பினர்கள் சட்ட மன்றத்திற்குத் தேர்வாகியுள்ளனர்.

உங்கள் கட்சி ஆட்சி அமைத்திட தனிப் பெரும்பான்மையை மக்கள் வழங்கவில்லை என்ற போதிலும் குடியரசுத் தலைவர் ஆட்சி வந்துவிடக் கூடாது என்பதில் கவனம் செலுத்தி, மக்களாட்சி மாத்திரமே நமக்கானதாக இருக்க முடியும் என்பதால் புதிய அரசு அமைந்திட நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியிருக்கிறோம்.

இதுதான் சாத்தியமாகும் என்ற நிலையில் மிக நீண்ட பரிசீலனைக்குப் பிறகு எங்கள் கட்சியின் அவசர உயர்மட்டக் குழு கூட்டம் கூடி அரசு அமைக்க ஆதரவு தருவதாக முடிவு எடுத்து அறிவித்தோம். திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் புதிய அரசு அமைப்பதில் தமிழக ஆளுநர் மேலும் தாமதிக்காமல் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்து அவரின் அரசியல் முதிர்சியையும் மக்களாட்சியின் மேல் அவர் கொண்டிருக்கும் அக்கறையையும் வெளிக்காட்டி இருந்தார். அதன் அடிப்படையிலேயே திமுக கூட்டணியில் அங்கம் வைக்கும் இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகள், விசிக, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய நாங்கள் எவ்வித நிபந்தனையும் இன்றி புதிய அரசு அமைத்திட ஆதரவு கரம் நீட்டியுள்ளோம். ஆனாலும், நாங்கள் கொள்கை அடிப்படையில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணியிலேயே தொடர்வதாகவும் அறிவித்திருக்கிறோம். அதன் பிறகே, ஆளுநர் உங்களை அழைத்து நேற்றைய தினம் புதிய அரசை அமைத்திருக்கிறார். தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்று உங்களின் முதல் உரையிலேயே ""தமிழக அரசின் கஜானா முழுவதும் துடைக்கப்பட்டு இருப்பதாகவும், ரூ.10 லட்சம் கோடி கடன் வைத்துள்ளதாகவும் குறிப்பிட்டு குறை கூற தொடங்கியிருப்பது ஆரோக்கியமற்றது.எந்த அரசும் தேவைக்கேற்ற நிதியைப் பெற கடன் வாங்காமல் இருப்பதில்லை; அந்த கடனும் துறை சார்ந்த உயர்நிலை அதிகாரிகளும் பொருளாதார வல்லுனர்களும் ஒருசேர கலந்து ஆய்வு செய்தே அரசு நிர்வாகத்தின் வரம்புக்கு உட்பட்ட நிலையில் முடிவுகள் எடுத்து கையாளப்படுவது வழக்கம். இப்போதுதான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளீர்கள்.தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளில் வருவாய் மற்றும் நிதிநிலை சார்ந்த பலதரப்பட்ட சரியான தகவல்களை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளின் மூலம் மிகத் தெளிவாகத் தெரிந்து கொண்டு தான் உங்களின் வார்த்தைகள் வெளிவர வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

உங்கள் தலைமையிலான புதிய ஆட்சியின் மக்கள் நலத்திட்டங்கள், பொருளாதார மேம்பாடு, கல்வி மற்றும் தொழில் வளர்ச்சி போன்ற பார்வையில் மாத்திரமே ஒரு முதல்வரின் உரை அமைந்தால் அனைத்து தரப்பினராலும் வரவேற்கத்தக்கதாக இருக்கும். எனவே, எடுத்த எடுப்பிலேயே குறைகள் சொல்லி ஆட்சியைத் தொடங்காமல், மக்கள் எதிர்பார்த்திடும் நல்ல, ஆரோக்கியமான, எல்லோருக்குமான சிறந்த ஆட்சியாக அமைந்திடவே விரும்புகிறோம்.எனவே, ஆரோக்கியமான அரசியலை முன்னிறுத்தி, சிறப்பான நிர்வாகத்தை நடத்தி, நாட்டு மக்களின் நலனை மாத்திரமே தாரக மந்திரமாகக் கொண்டு, மதக் காழ்ப்புணர்ச்சிகளுக்குக் கொஞ்சமும் இடம் தராமல் முந்தைய ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்ட சிறப்பான மக்கள் நலத் திட்டங்களை தொடரச் செய்து அனைத்து தரப்பினரின் வரவேற்பையும் பாராட்டுக்களையும் பெறுகின்ற நல்லாட்சியைத் தரவேண்டும் என்பதே தமிழக மக்களின் எதிர்பார்ப்பு." இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



# உடுமலையில் திமுகவினர் உற்சாகம்: வெற்றி பெற்ற எம்.எல்.ஏக்களுக்கு பிரம்மாண்ட வரவேற்பு

திருப்பூர் மே.12-
நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மு.ஜெயகுமார் மற்றும் மடத்துக்குளம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற இராஜஜெயராமகிருஷ்ணன் ஆகியோரது வெற்றியை முன்னிட்டு, உடுமலை நகரில் திமுகவினர் பிரம்மாண்ட வெற்றிப் பேரணி நடத்தினர். திருப்பூர் தெற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளரும், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினருமான மான கே.ஈஸ்வரசாமி அவர்கள் தலைமையில் இந்த உடுமலை நகர டூவீலர் பேரணி நடைபெற்றது. உடுமலை நகர கழகச் செயலாளர் வேலுச்சாமி முன்னிலையில், உடுமலை நகரம் ஏரிப்பாளையம் பகுதியிலிருந்து தொடங்கிய இந்தப் பேரணி, நகரின் முக்கிய வீதிகள் வழியாகச் சென்றது.பேரணியின் நிறைவாக, மாவட்ட கழக அலுவலகத்தில் வெற்றி பெற்ற எம்.எல்.ஏக்களான மு.ஜெயகுமார் மற்றும் இராஜஜெயராமகிருஷ்ணன் ஆகியோருக்கு பொன்னாடை அணிவித்து உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.
இந்நிகழ்ச்சியில் உடுமலை நகர மன்றத் தலைவர் மத்தீன், ஒன்றிய கழகச் செயலாளர்கள், இராஜமாணிக்கம், செழியன், சாகுல் அமீது (ஒன்றிய கழகச் செயலாளர்கள்), கவிதாகிரி, மெய்ஞானமூர்த்தி, அடிவள்ளி முரளி, பாபு செந்தில்குமார், மாரிமுத்து, திமுக சார்பு அணிப் பொறுப்பாளர்கள், மகளிர் அணி, இளைஞர் அணி மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் எனப் பெரும் திரளானோர் கலந்துகொண்டு தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

# பெருந்தலைவர் காமராஜர் தந்த கொடை. வனத்துறை வசமான பழைய குற்றாலம்! கட்டணத்தை ரத்து செய்ய லூர்து நாடார் கோரிக்கை




தென்காசி மே 12-
"ஏழைகளின் ஊட்டி" என்று அழைக்கப்படும் குற்றாலத்தில், பெருந்தலைவர் காமராஜரால் பொதுமக்களுக்காக அர்ப்பணிக்கப்பட்ட பழைய குற்றால அருவியில் குளிக்கக் கட்டணம் வசூலிப்பதைக் கண்டித்து, தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பு அதிரடியாகக் களமிறங்கியுள்ளது.
பழைய குற்றால அருவியில் பொதுமக்கள் குளிப்பதற்கு வனத்துறை நிர்ணயித்துள்ள கட்டணத்தை உடனடியாக ரத்து செய்ய வலியுறுத்தி, தென்காசி மாவட்ட ஆட்சியரிடம் தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் நிறுவனத் தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் தலைமையில் அளிக்கப்பட்ட அந்த மனுவில், "1960ல் பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் பொதுமக்களுக்காகத் திறந்து வைக்கப்பட்ட பழைய குற்றாலத்தில், 65 ஆண்டுகளாக இல்லாத கட்டணம் தற்போது வசூலிக்கப்படுவது கண்டிக்கத்தக்கது. வனத்துறையிடம் அருவி ஒப்படைக்கப்பட்ட பிறகு, வாகன நுழைவு மற்றும் குளிப்பதற்குக் கட்டணம் வசூலிக்கப்படுவதால் சுற்றுலா பயணிகள் கடும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். இந்த கட்டண முறையை முழுமையாக ரத்து செய்து, பழைய நிலையை நீடிக்கச் செய்ய வேண்டும்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அகரக்கட்டு லூர்து நாடார் (நிறுவனத் தலைவர், த.நா.உ.கூட்டமைப்பு), சுப்ரமணியன் (பொருளாளர்), குருசாமி நாடார் (தென்காசி மாவட்ட தலைவர்), பாலசுப்பிரமணியன், கிருஷ்ணமூர்த்தி, சமீத் (மாநிலக் குழு உறுப்பினர்கள்) நிகழ்வில் பங்கேற்றனர்.

# கல்விப் பணியில் சிகரம் தொட்ட கணபதிபாளையம் அரசுப் பள்ளி! +2 பொதுத்தேர்வில் 100% தேர்ச்சி பெற்று சாதனை





ஈரோடு.மே 12-
ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி வட்டம், கணபதிபாளையம் அரசு மேல்நிலைப்பள்ளி, தனது தரமான கல்வியால் இப்பகுதி மக்களிடையே பெரும் மதிப்பைப் பெற்றுள்ளது. இந்நிலையில், தற்போது வெளியாகியுள்ள 2026ம் ஆண்டு பிளஸ்2 பொதுத்தேர்வு முடிவுகளில் இப்பள்ளி 100% தேர்ச்சி பெற்று மாவட்ட அளவில் கவனத்தை ஈர்த்துள்ளது. இப்பள்ளியில் பிளஸ்2 பொதுத்தேர்வு எழுதிய 156 மாணவ, மாணவிகளும் முழுமையாகத் தேர்ச்சி பெற்றுப் பள்ளிக்குப் பெருமை சேர்த்துள்ளனர். குறிப்பாக, மாணவிகள் முதல் மூன்று இடங்களைப் பிடித்து முத்திரை பதித்துள்ளனர்: முதலிடம் டி. தனு ஸ்ரீ: 600க்கு 554 மதிப்பெண்கள், கே. ராஜலட்சுமி: 600க்கு 551 மதிப்பெண்கள் பற்று இரண்டாம், டி. அகல்யா: 600க்கு 542 மதிப்பெண்கள் பெற்று மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளனர். இவர்களைத் தவிர, மேலும் 12 மாணவ, மாணவிகள் 500 மதிப்பெண்களுக்கு மேல் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர்.அரசுப் பள்ளி மாணவர்களின் இந்தச் சீரிய சாதனையை இப்பகுதி மக்கள் வியந்து பாராட்டி வருகின்றனர். சிறப்பாகத் தேர்வு எழுதிய மாணவ, மாணவிகளுக்கும், அவர்களைச் செதுக்கிய தலைமை ஆசிரியர் மற்றும் இருபால் ஆசிரியர்களுக்கும் ஊர் பொதுமக்கள் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழகம் சார்பில் மனமார்ந்த நன்றிகளும், பாராட்டுகளும் தெரிவிக்கப்பட்டுள்ளன.



■ சேலம், ஆட்டையாம்பட்டி தீயணைப்பு மீட்பு பணிகள் நிலையத்திற்கு,11.05.2026 திங்கள் கிழமையன்று அதிகாலை 3 மணி அளவில்,சேலம், சங்ககிரி வட்டம் இடங்கணசாலை (நகராட்சி), கவுண்டன் வட்டம், நல்லண்ணம்பட்டியில், திரு.ராஜா, என்பவரது விவசாயக் கிணற்றில் இரண்டு நபர்கள் தவறி விழுந்து விட்டதாக தகவல் கிடைக்கப்பெற்றது. இதனையறிந்த, ஆட்டையாம்பட்டி தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையத்தின் நிலை அலுவலர் பொறுப்பு 6351 சி.அருணகிரி அவர்கள் தலைமையில், தீயணைப்பு ஊர்தியில் உரிய குழுவினருடன் விபத்து நடந்த இடத்திற்கு விரைந்து சென்று, விவசாய ஆழ்கிணற்றில், அருள் (வயது 28) மற்றும் அவரது மனைவி சுசீலா (வயது 24) என்பவரையும் தீயணைப்பு படையினர் நீண்ட நேரம் போராடி நல்ல நிலைமையில் உயிருடன் மீட்டனர். பொதுமக்கள் தீயணைப்பு படையினரை வெகுவாக பாராட்டினார்.

# கிருஷ்ணகிரி அருகே சாலையோரம் அரை கி.மீ இடைவெளியில் 2 இளைஞர்கள் எரித்துக் கொலை

கிருஷ்ணகிரி:.மே 12-
கிருஷ்ணகிரி அருகே 2 இளைஞர்கள் எரித்துக் கொல்லப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கிருஷ்ணகிரி அருகே ஆலப்பட்டி என்ற கிராமத்தில் அரை கி.மீ இடைவெளியில் இரு இளைஞர்களின் சடலங்கள் கிடப்பதாக போலீஸாருக்குத் தகவல் கிடைத்தது. நிகழ்விடத்திற்கு விரைந்து சென்ற போலீசார் மேற்கொண்ட விசாரணையில் இரு இளைஞர்களும் ஒரே பாணியில் பெட்ஷீட் சுற்றி, பெட்ரோல் ஊற்றி எரிக்கப்பட்டது தெரியவந்தது. இரு உடல்களையும் மீட்டு பிரேதப் பரிசோதனைக்கு கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.இதனையடுத்து போலீசார் மேற்கொண்ட முதல்கட்ட விசாரணையில் இரு இளைஞர்களும் வேறு எங்கோ கொலை செய்யப்பட்டது தெரியவந்துள்ளது. வேறு எங்கோ கொலை செய்து சடங்களை வீசி சென்ற மர்ம கும்பல் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இதனால் இளைஞர்கள் எரித்துக் கொல்லப்பட்ட சம்பவம் கிராம மக்கள் இடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது



■ தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் பதவியேற்றத்தை முன்னிட்டு, உடுமலை நகரில் தமிழக வெற்றிகழக நிர்வாகிகள் பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் திருப்பூர் தெற்கு மாவட்ட செயலாளர் திருமலை வழிகாட்டுதலின் படி உடுமலை நகர செயலாளர் எஸ்.அபுதாஹீர், உடுமலை நகர இளைஞர் அணி அமைப்பாளர் நன்னிலன் உடுமலை நகர இளைஞர் அணி இணை அமைப்பாளர் முகமது சல்மான் மற்றும் உடுமலை நகர தமிழக வெற்றிகழக பொருப்பாளர்கள் கலந்துகொண்டார்கள். இந்நிகழ்ச்சி இளைஞர் நிர்வாகிகள் தலைமையில் நடைபெற்றது.



■ ஈரோடு மாவட்டம் கொடுமுடி வட்டம் பாசூரில் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் ச.ஜோசப் விஜய் அவர்கள் முதல்வர் பதவி ஏற்றதை கொண்டாடும் விதமாக பாசூர் பேரூராட்சி தமிழக வெற்றிக் கழகத்தின் பேரூர் செயலாளர் எம்.ஞானசேகரன் மற்றும் பொறுப்பாளர்கள் தலைமையில் வெற்றிக் கொண்டாட்டம் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வில் சுவாமிக்கு சிறப்பு பூஜைகள் மற்றும் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

# முதல்வராக விஜய் பதவியேற்ற நிகழ்ச்சியை கேரள திரையரங்குகளில் கண்டுகளித்த ரசிகர்கள்

பாலக்காடு::மே 12-
தமிழக முதல்வராக விஜய் நேற்று பதவியேற்றதை கேரளாவில் அவரது ரசிகர்கள் திருவிழா போன்று கோலாகலமாக கொண்டாடி தீர்த்தனர்.
சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் பிரம்மாண்டமாக நடைபெற்ற விஜய் பதவியேற்பு விழாவை, கேரளாவின் பாலக்காடு உள்ளிட்ட பகுதிகளில் உள்ள திரையரங்குகளில் ரசிகர்கள் நேரடி ஒளிபரப்பு செய்ய ஏற்பாடு செய்திருந்தனர். திரையரங்குகளே விழாக்கோலம் பூணும் வகையில், ரசிகர்கள் பெருமளவில் திரண்டு வந்து முதல்வராக விஜய் பதவியேற்ற தருணத்தைக் கொண்டாடி மகிழ்ந்தனர்.
உற்சாகக் கொண்டாட்டங்கள் பாலக்காட்டில் திரண்ட ரசிகர்கள் மேள தாளங்கள் முழங்க, பட்டாசுகள் வெடித்து, இனிப்புகள் வழங்கித் தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். அரசியலில் நுழைந்தபோது விஜய் எதிர்கொண்ட விமர்சனங்களுக்கு இந்த வெற்றி ஒரு தக்க பதிலடி என்றும், இது சாமானிய மக்களின் வெற்றி என்றும் அவரது ஆதரவாளர்கள் உணர்ச்சிப் பொங்கத் தெரிவித்தனர்.
வரலாற்றுத் தருணம் திரைத்துறையில் இருந்து அரசியல் பயணத்தைத் தொடங்கிய விஜய், தற்போது தமிழகத்தின் 13வது முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ளது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க அரசியல் மாற்றமாகக் கருதப்படுகிறது. கேரளாவிலும் அவருக்குள்ள பெரும் ரசிகர் பட்டாளம், இந்த நிகழ்வை ஒரு மிகப் பெரிய திருவிழாவாக மாற்றிக் காட்டியுள்ளது.







## தமிழக முதல்வராக விஜய் பொறுப்பேற்பு

# அலங்காநல்லூரில் த.வெ.க.வினர் இனிப்பு வழங்கி உற்சாகக் கொண்டாட்டம்

அலங்காநல்லூர் மே 12-
தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து, அலங்காநல்லூரில் பேருந்து நிலையம் மற்றும் உலகப் புகழ்பெற்ற ஜல்லிக்கட்டு வாடிவாசல் பகுதிகளில் பேரூர் கழகம் சார்பில் பிரம்மாண்ட கொண்டாட்டங்கள் நடைபெற்றன.
மதுரை மாநகர் வடக்கு மாவட்டச் செயலாளர் விஜய் அன்பன் கல்லணை, புறநகர் மாவட்டச் செயலாளர் விஷால் கிருஷ்ணா ஆகியோரின் உத்தரவின் பேரிலும், ஒன்றிய செயலாளர் விஜய் ஹரிஷ், நகரச் செயலாளர் தளபதி ரஞ்சித் ஆகியோரின் ஆலோசனையின் பேரிலும் இந்தத் திருவிழா போன்ற கொண்டாட்டம் ஒருங்கிணைக்கப்பட்டது. பேருந்து நிலையம் மற்றும் சந்தைப் பகுதிகளில் இருந்த வணிகர்கள், வியாபாரிகள் மற்றும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி தங்களது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டனர்.
பங்கேற்ற நிர்வாகிகள்:
இந்த நிகழ்ச்சியில் பேரூர் கழக நிர்வாகிகள் வெங்கடேசன், அய்யங்காளை, முருகேசன், ராஜமுனி, விக்னேஷ், சேது, விக்னேஷ்பாண்டி, சரத்குமார், மதன், நாகராஜ், விஜய்கணேஷ், பூச்சிராஜா, தங்கராஜ், அசோக், மகளிரணி நிர்வாகிகள் தனலட்சுமி, பிரீத்தி, வினிதா, திலகவதி, சுமதி, ஈஸ்வரி, சந்திரகலா, பாண்டிசெல்வி, பிரியதர்ஷினி உள்ளிட்ட திரளானோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.



■ தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப., மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், பொது மக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் கோரிக்கை மனுக்களை பெற்று மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.













SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000